குரூப் 2 Mains · அலகு II – தமிழ்ச் சமூகம்: பண்பாடு, பாரம்பரியம் · 15 மதிப்பெண் · 250 சொற்கள் · 2026-11-04

தஞ்சைப் பெருவுடையார் கோயில் (இராசராசேச்சரம்) சோழர் காலக் கலை, கட்டடக்கலையின் உச்சம் மட்டுமல்லாமல், தமிழ்ச் சமூகத்தின் பொருளாதார, பண்பாட்டு மையமாகவும் விளங்கியது – ஆராய்க.

The Brihadisvara temple (Rajarajesvaram) at Thanjavur was not merely the pinnacle of Chola art and architecture but also an economic and cultural hub of Tamil society. Examine.

1. செய்தித் தொடர்பு – சதய விழா

- முதலாம் இராசராச சோழன் (ஆட்சி கி.பி. 985–1014) – பிறந்த நட்சத்திரம்: ஐப்பசி மாதச் சதயம்; ஆண்டுதோறும் தஞ்சைப் பெரிய கோயிலில் "சதய விழா".
- 1041-ஆம் சதய விழா – 22.10.2026; தஞ்சாவூர் மாவட்டத்துக்கு உள்ளூர் விடுமுறை; பெருவுடையாருக்குச் சிறப்பு அபிஷேகம்; தஞ்சை அரண்மனையிலிருந்து பெரிய கோயில் வரை கலைஞர்களின் ஊர்வலம்; சதய விழாவில் ஓதுவார்கள் திருமுறை ஓதுவது மரபு.
- 02.11.2022 – சதய விழா இனி அரசு விழாவாகக் கொண்டாடப்படும் என முதலமைச்சர் அறிவிப்பு (அந்த ஆண்டு 1037-ஆம் விழா); தஞ்சையில் உள்ள இராசராசன் மணிமண்டபம் புதுப்பிக்கப்படும்.

2. கோயில் – அடிப்படைத் தகவல்கள்

- பெயர்கள்: இராசராசேச்சரம் (கல்வெட்டுப் பெயர்), பெருவுடையார் கோயில், பிரகதீசுவரர் கோயில், தஞ்சைப் பெரிய கோயில்; சிவன் கோயில்.
- கட்டியவர்: முதலாம் இராசராச சோழன்; கி.பி. 1010 அளவில் நிறைவு.
- விமானம்: சுமார் 216 அடி; கருங்கல் கட்டுமானம்; உச்சிக்கல் "சுமார் 80 டன்" (தமிழ்நாடு சுற்றுலாத் துறை).
- இந்தியத் தொல்லியல் துறை (ASI) பாதுகாக்கும் நினைவுச் சின்னம்.

3. கலை, சிற்பம், ஓவியம்

- நாட்டிய சாஸ்திரத்தின் 108 கரணங்களில் முதல் 81 கரணங்கள் கருவறையைச் சுற்றிய பாதைச் சுவரில் சிற்பமாக; மீதி முடிக்கப்படவில்லை.
- சோழர் சுவரோவியங்கள்: கருவறைச் சுற்றுப்பாதையில், 17-ஆம் நூற்றாண்டு நாயக்கர் ஓவியங்களுக்கு அடியில்; 1931-இல் அண்ணாமலைப் பல்கலைக்கழக வரலாற்று விரிவுரையாளர் எஸ்.கே. கோவிந்தசாமி கண்டறிந்தார்.

4. கல்வெட்டுகள் காட்டும் பொருளாதாரம், சமூகம்

கூறு	கல்வெட்டுச் சான்று
கடன், வட்டி	கிராம சபைகள் கோயிலிடமிருந்து வட்டிக்குப் பணம் பெற்றன; வட்டி ஆண்டுக்கு 12½% (தென்னிந்தியக் கல்வெட்டுகள் தொகுதி II, முன்னுரை).
நடனப் பெண்கள்	சுமார் 400 பேர் – திருவாரூர், திருவையாறு முதலிய சோழநாட்டுக் கோயில்களிலிருந்து இடமாற்றம்; ஒவ்வொருவரின் பெயர், ஊர், கோயில் தெரு, வீட்டு எண் பதிவு; வீடும் நில விளைச்சலில் பங்கும் (கல்வெட்டு எண் 66, வடக்குத் திருமதில்).
பிற பணியாளர்கள்	ஆடல் ஆசிரியர்கள், இசைக்கலைஞர்கள், தமிழ் – சமஸ்கிருதப் பாடல் பாடுவோர், கணக்கர்கள், வண்ணூர், தையல்காரர் முதலியோர்; ஊதியம் நெல் / நிலமாக.
அளவை	"ஆடவல்லான்" என்ற மரக்கால் – நெல் அளவைக்கான தர அலகு.

5. மரபுச் சின்ன அங்கீகாரம், பிற்கால நிகழ்வுகள்

- UNESCO உலக மரபுச் சின்னம் – 1987; 2004-இல் கங்கைகொண்டசோழபுரம் கோயில் (முதலாம் இராசேந்திரன்), தாராசுரம் ஐராவதேசுவரர் கோயில் (இரண்டாம் இராசராசன்) சேர்க்கப்பட்டு "Great Living Chola Temples".

- 2010 – கோயிலின் ஆயிரமாவது ஆண்டு; "ONE THOUSAND YEARS OF BRIHADEESWARAR TEMPLE" என்ற ₹5 நினைவு நாணயம் (RBI செய்தி வெளியீடு 11.03.2011).
- 05.02.2020 – குடமுழுக்கு, 23 ஆண்டுகளுக்குப் பின்; தமிழில் மட்டும் நடத்தக் கோரிய மனுக்களைச் சென்னை உயர் நீதிமன்றம் ஏற்கவில்லை; தமிழ், சமஸ்கிருதம் இரண்டிலும் நடத்தப்படும் என அரசு உறுதியளித்தது.

6. விடையை உயர்த்தும் சொற்கள்

- கோயில் ஒரு நிறுவனம் (temple as an institution), கல்வெட்டுச் சான்று (epigraphic evidence), கோயில் வங்கி (temple banking), அரசப் புரவலம் (royal patronage), வாழும் மரபு (living heritage).

In English

Key facts

- Rajaraja Chola I (r. 985–1014 CE); birth star Sadhayam in the Tamil month of Aippasi – the annual "Sadhaya Vizha" at the Big Temple, Thanjavur.
- 1041st Sadhaya Vizha: 22.10.2026; local holiday in Thanjavur district; special abhishekam to Peruvudaiyar; a procession of artistes from the Thanjavur palace to the Big Temple; odhuvars traditionally recite the Thirumurai at the festival.
- 02.11.2022: the Chief Minister announced the Sadhaya Vizha would be a government function (that year the 1037th); Rajaraja's memorial (manimandapam) in Thanjavur to be renovated.
- Names: Rajarajesvaram (in the inscriptions), Peruvudaiyar temple, Brihadisvara temple, Thanjavur Big Temple; a Siva temple. Completed around 1010 CE. Vimana about 216 ft, granite; top stone "nearly 80 tons" (Tamil Nadu Tourism). ASI-protected monument.
- Sculpture: the first 81 of the 108 karanas of the Natya Shastra carved on the wall of the passage around the sanctum; the series is unfinished.
- Frescoes: Chola paintings in the passage around the sanctum, beneath 17th-century Nayak paintings; discovered in 1931 by S.K. Govindasamy, history lecturer, Annamalai University.
- Inscriptions (South Indian Inscriptions, Vol. II): village assemblies borrowed from the temple at 12½% interest a year; about 400 dancing women transferred from Chola-country temples such as Tiruvarur and Tiruvaiyaru – name, home village, temple street and house number recorded, each given a house and a share of land produce (No. 66, north enclosure).
- Other staff: dance masters, musicians, singers of Tamil and Sanskrit hymns, accountants, washermen, tailors – paid in paddy / land. Paddy measure named "Adavallan".
- UNESCO World Heritage Site 1987; extended 2004 with the Gangaikondacholapuram temple (Rajendra I) and the Airavatesvara temple, Darasuram (Rajaraja II) as the "Great Living Chola Temples".
- 2010: the temple's 1000th year; RBI ₹5 commemorative coin "ONE THOUSAND YEARS OF BRIHADEESWARAR TEMPLE" (RBI press release 11.03.2011).
- 05.02.2020: consecration (kudamuzhukku) after 23 years; the Madras High Court rejected pleas for a Tamil-only ceremony; the Government said it would be held in both Tamil and Sanskrit.
- Value-add terms: temple as an institution, epigraphic evidence, temple banking, royal patronage, living heritage.

அதிகாரப்பூர்வ ஆதாரங்கள்

- பிரகதீசுவரர் கோயில், தஞ்சாவூர் – தமிழ்நாடு சுற்றுலாத் துறை (அதிகாரப்பூர்வ பக்கம்) – https://tamilnadutourism.tn.gov.in/destinations/brihadeeswara-temple
- சதய விழா – பிரகதீசுவரர் கோயில் (இந்திய அரசு உத்சவ் விழா இணையதளம்) – https://utsav.gov.in/view-event/sadhaya-vizha-brihadeeswarar-temple-1
- "பிரகதீசுவரர் கோயிலின் ஆயிரம் ஆண்டுகள்" ₹5 நினைவு நாணயம் – இந்திய ரிசர்வ் வங்கி செய்தி வெளியீடு – https://www.rbi.org.in/Commonman/English/scripts/PressReleases.aspx?Id=1116

இது தகவல் குறிப்பு மட்டுமே. நீங்களே விடை எழுதி WhatsApp 99941 46662-க்கு அனுப்புங்கள்; மாதிரி விடை மறுநாள்: shanmugamiasacademy.in/tnpsc-mains-practice/2026-11-04-thanjavur-big-temple-chola

© Shanmugam IAS Academy, Coimbatore – 2006 முதல். இலவசமாகப் பகிரலாம்; விற்பனைக்கு அல்ல.